பக்கங்கள்: 10 விலை : 20/-

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 06 சனிக்கிழமை 20.06.2020 கதிர் 95

## காணாமற்போனோரின் உறவுகள் கவனவீர்ப்பு

முல்லைத்தீவு, ஜூன் 20

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் இன்று மாபெரும் கவனவீர்ப்புப்போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

2

# 3,000 ராணுவத்தினரை கொன்றேன் என்பதுதான் கோட்டாவுக்கு கருணாவின் பிறந்தநாள் வாழ்த்து



## விசனிக்கின்றார் மங்கள சமரவீர

கொழும்பு, ஜூன் 20

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குப் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்துள்ள முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர, தாம் எத்தனை படையினரைக் கொன்றோம் என்று கூறி, அது குறித்துப் பெருமையடைவதுதான் 'போர்வெற்றி' ஜனாதிபதிக்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சியின் வேட்பாளர் கருணா அம்மான் வாழ்த்துத் தெரிவிக்கும் முறையா? என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

2

## கருணாவின் உரைக்கு எதிராக ஐ.தே.கவினரும் போர்க்கொடி!

கொழும்பு, ஜூன் 20

மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக கருணா அம்மான் தெற்கிலும், வடக்கு மற்றும் கிழக்கிலும் வெவ்வேறு மாதிரியாக கருத்துக்களைக் கூறி வருகின்றார். இவர் போன்ற சந்தர்ப்பவாதிகளை மக்களை ஏமாற்றுவதற்கு அறிவுள்ள மக்கள் சமூகம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை.

- இவ்வாறு முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி பொதுச் செயலாளருமான ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு ஆதரவளிக்கும் வகையில் களமிறங்கியுள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கிழக்கு மாகாண முன்னாள் தளபதியான விநாயகமூர்த்தி முரளிதரன்எனப்படும்கருணாஅம்மான் தெரிவித்துள்ள கருத்துக்கள் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பரவலான கருத்துக்கள்முன்வைக்கப்படுகின்றன.

அம்பாறையில்நடைபெற்ற மக்கள்

2

## கருணாவை கைது செய்!

### சிங்கள ராவய போர்க்கொடி

கொழும்பு, ஜூன் 20

கருணா அம்மான் இனப்படுகொலையை செய்துள்ளார். உடனடியாக அவரைக் கைது செய்ய வேண்டும்.



- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரியுள்ளார் சிங்கள ராவய அமைப்பின் பொதுச்செயலாளர் மாகல்கந்தே சுதத்த தேரர்.

(விரிவான செய்தி 6ஆம் பக்கம்)

## இரண்டு மாவட்டங்களில் ஒரே நபர் வேட்பாளராக?

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜூன்20

ஈ.பி.டி.பி.கட்சி சார்பில் திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்புமனுக்களில் ஒரே வேட்பாளரின் பெயர்

2

## ராஜபக்ஷ அரசில் பிரதமராக வருவதற்கு துடிக்கிறார் சஜித்

### மஹிந்த அணி தாக்கு



கொழும்பு, ஜூன் 20

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசின் கீழ் பிரதமராக வர முன்னாள்

2

## 520 கிலோ இறைச்சி சிக்கியது

### இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 20

நாவாந்துறைப் பகுதியில் சட்ட விரோதமாக வெட்டப்பட்ட 520 கிலோ இறைச்சி மீட்கப்பட்டுள்ளது.



சட்டவிரோ தமான முறையில் கால்நடைகளை இறைச்சிக்காக வெட்டிய 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது இறைச்சிக்கு வெட்டுவதற்குத் தயாராகக் கட்டி வைத்திருந்த 3 மாடுகள், 2 ஆடுகள் என்பனவும் மீட்கப்பட்டன.

2

## யாழ். செயலகத்தில் செவ்வாய் மாதிரி வாக்கு எண்ணும் பணி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜூன் 20

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மாதிரி வாக்கு எண்ணும் பணி நடத்தப்படவுள்ளது.

இந்த மாதிரி வாக்கு எண்ணும் பணிக்காக 7ஆயிரம் வாக்குகள் பயன்படுத்தப்படவுள்ளமையோடு 20 பணியாளர்களும் உத்தியோகபூர்வ பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இதேநேரம் வாக்கெண்ணும் நிலைய முகவர்களுக்காகவும் மேலும் சிலர் அனுமதிக்கப்பட்டு

2

## யாழில் ஒரு மாதத்தில் மட்டும் 337 பேர் விபத்துகளில் சிக்கினர்

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 337 பேர் வீதி விபத்து, தீ விபத்து உள்ளிட்ட பல்வேறு விபத்துக்களால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

2

## மன்னார் முஸ்லிம்களுக்கு புத்தளத்திலும் பதிவுகளா?

### சந்தேகம் கிளப்புகிறார் சாள்ஸ்

(ந.லோகதயாளன்)

மன்னார் மாவட்டத்தில் முஸ்லிம்களின் எண்ணிக்கைக் காகப் பதிவில் உள்ள மக்களில் பலர் புத்தளத்திலும் பதிவை வைத்துள்ளனர் என்ற நீண்ட நாள் சந்தேகம் கொவிட் -19ன் நிவாரண நிதியான 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவுப் பட்டியல் மூலம்



2

## 520 கிலோ இறைச்சி ..................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் பகுதியில் சட்டவிரோதமாக கால்நடைகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதாக அப்பகுதி பொது மக்களால் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

இத்தகவலின் அடிப்படையில் இன்று காலை அங்கு மாநகர சபை ஊழியர்களுடன் சென்ற பொதுச் சுகாதாரப் பரிசோதர்கள் அப்பகுதி பொதுமக்களுடன் இணைந்து இறைச்சி வெட்டப்படும் இடத்தை முற்றுகையிட்டனர்.

இதன்போது 520 கிலோ கிராம் மாட்டிறைச்சி சிக்கியதுடன் 3 மாடுகள், 2 ஆடுகள் என்பனவும் மீட்கப்பட்டன.

அந்த இடத்துக்கு யாழ். மாநகர சபை பதில் முதல்வர் து.ஈசனும் சென்று ஆராய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மன்னார் முஸ்லிம்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் வலுப் பெறுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மன்னார் மாவட்டத்தைச் சொந்த இடமாகக் கொண்டு 1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து புத்தளத்தில் வசிக்கும் முஸ்லிம் மக்கள் கொவிட் - 19 பாதித்த மக்களுக்கு வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா நிவாரண நிதி தங்களுக்கும் வழங்கப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இவ்வாறு புத்தளத்தில் வசிக்கும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 2 ஆயிரத்து 571 குடும்பங்களுக்கு இந்த நிதியை வழங்கும் வகையில் இரு நாள்களாக மன்னார் மாவட்ட செயலாளரின் ஏற்பாட்டில் வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வாறு 2 ஆயிரத்து 571 பேருக்கான ஏற்பாடுகள் மேற்கொண்ட நிலையில் ஆயிரத்து 508 பேர் மட்டுமே வங்கிக் கணக்குகளை ஆரம்பிக்கும் பணிக்காகச் சமுகமளித்திருந்தனர். ஆயிரத்து 63 குடும்பங்கள் அந்த நிதியைப் பெறுவதற்காக விண்ணப்பித்துக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கு சமுகமளிக்கவில்லை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு நிவாரண நிதியைப் பெறும் பதிவுக்கே சமுகமளிக்கவில்லை எனில் அவ்வாறானவர்கள் அங்கும் வசிக்கின்றனரா அல்லது நிரந்தரமாக புத்தளம் மாவட்டத்துடன் இணைந்தபோதும் மன்னாரில் முஸ்லிம்களின் வாக்கு எண்ணிக்கைக்காகப் பதிவு மட்டும் பேணப்படுகின்றதா என்பதை அதிகாரிகள் உறுதி செய்யவேண்டும்.

அவ்வாறு அதனை உறுதிப்படுத்த முடியாதுவிடின் இவ்வாறு மாறுபட்ட தன்மை காணப்படும் ஆயிரம் குடும்பங்களின் விவரங்கள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். அதன் மூலமே அரச அதிகாரிகள் மீது மக்களுக்கு நம்பிக்கை அதிகரிக்கும். இவற்றை மேற்கொள்ள முடியாதுவிடத்தில் அந்த ஆயிரம் பேரின் விவரங்களையும் புத்தளம் மாவட்ட செயலாளருக்கு அனுப்பி இவை தங்கள் மாவட்டத்தில் பதிவில் உண்டா என்பதை உறுதி செய்ய மாவட்ட செயலாளர் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

## யாழில் ஒரு மாதத்தில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதில் வீதி விபத்துக்கு உள்ளான நிலையில் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 3 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் பணிப்பாளர் மேலும் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த மே மாதத்தில் மட்டும் வீதி விபத்தில் 212 பேரும், ஏனைய விபத்தில் 118 பேரும், தீ விபத்தில் 7 பேரும் பாதிக்கப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 8 ஆம் திகதியில் இருந்து 14 ஆம் திகதி வரை வீதி விபத்தில் 43 பேரும், ஏனைய விபத்தில் 68 பேரும் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் வீதி விபத்தில் காயமடைந்த இருவர் உயிரிழந்துள்ளனர் - என்றார்.

## யாழ். செயலகத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனி இடத்தில் அடிப்படை சுகாதார வசதிகளுடன் கொரோனா தடுப்பு வசதிகளையும் பேணி வாக்கு எண்ணும் பணியை நிறைவேற்ற முடியுமா என்பதைக் கண்டறியும் நோக்கில் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.

இந்தப் பணியில் காணப்படும் சாதக பாதக நிலைமைகளைக் கண்டறிந்து அவை தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிக்கையிடப்பட்டு அதனை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின்போது வாக்கு எண்ணும் சமயத்தில் முன்னெடுக்கும் வகையிலேயே இவ்வாறு திட்டமிடப்பட்டுள்ளது.

இதேநேரம் மாதிரி வாக்கெடுப்பு யாழ்ப்பாணம் நாவாந்துறைப் பகுதியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## ராஜபக்ஷ அரசில் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எண்ணுகின்றார்.

- இவ்வாறு முன்னாள் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஊடக சந்திப்பிலே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமூகத்தில் கொரோனா நோயாளிகள் மீண்டும் தோன்றி பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடைய வேண்டும், வேலைவாய்ப்பின்மை உருவாக வேண்டும், மக்கள் பட்டினியில் வாழ வேண்டும் என்பதுவே எதிர்க்கட்சியினரின் எதிர்பார்ப்பாகும்.

ஆனால், நாம் எதிர்க்கட்சியினரின் தேவையை நிறைவேற்றுவதற்கன்றி இந்நாட்டில் தற்போதைய ஜனாதிபதிக்கு வாக்களித்த 69 இலட்சம் மக்களுக்காகவே பணி செய்கின்றோம்.

இன்று எதிர்க்கட்சியினரின் போராட்டம் நாடாளுமன்றத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதல்ல, கட்சிக்குள்ளேயே உள்ளது. யார் அதிக ஆசனங்களை வெல்வது என்ற போட்டியுள்ளது. இன்று சஜித் பிரேமதாஸவுக்கு சிறிகொத்தவின் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டியுள்ளது. தன்னை ஜனாதிபதியாக எண்ணியே ஜனாதிபதித் தேர்தலில் அவர் போட்டியிட்டு தோல்வியடைந்தார்.

இன்று தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் பிரதமராக வர சஜித் பிரேமதாஸ எண்ணுகின்றார். அவர் இன்று வேறாக தேர்தலில் போட்டியிட்டாலும் அக்கட்சியின் முக்கியமானவர்கள் விலகியுள்ளார்கள்.

அவர்கள் எதிர்வரும் ஒகஸ்ட் 05ஆம் திகதி தேர்தலின் பின்னர் மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைவார்கள் - என்றார்.

## இரண்டு மாவட்டங்க .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டிலும் உள்ளது எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

குறித்த இரு மாவட்டங்களிலும் தங்கராசா புஸ்பராசா என்னும் ஒரே வேட்பாளரே போட்டியிடுகின்றார் என்றே ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது. இந்த முறைப்பாட்டை திருகோணமலையைச் சேர்ந்த விக்னேஸ்வரன் என்பவர் செய்துள்ளார்.

இந்த முறைப்பாடு தொடர்பில் ஆணைக்குழு இதுவரை ஏதும் பதிலளிக்கவில்லை. ஆனால் இருவரும் வேறு வேறு வேட்பாளர்கள் என ஈ.பி.டி.பியினர் தெரிவிக்கின்றனர்.

## காணாமற்போனோரின் உறவுகள்..............







(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறுதிப்போரின்போது இராணுவத்திடம் கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் யுத்தம் முடிவடைந்து வெள்ளைக்கொடியுடன் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், யுத்தகாலங்களில் வெள்ளை வான்களில் கடத்தி காணாமல் ஆக்கப்பட் வர்கள் எனப் பலதரப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எட்டாம் திகதி ஆரம்பித்த தொடர் கவனிப்புப்போராட்டமானது இன்று ஆயிரத்து 200 ஆவது நாளாகவும் தொடர்கின்றது.

ஒப்படைக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் உரிய பதிலை வழங்குமாறு கோரி பல்வேறு போராட்டங்களை அவர்கள் முன்னெடுத்தபோதும் அதற்கு எந்தவித தீர்வுகளும் இன்னும் எட்டப்படவில்லை.

தமது தொடர் போராட்டம் ஆயிரத்து 200 ஆவது நாளை எட்டியுள்ளதை அடுத்து அவர்கள் இன்று கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தினர்.

தொடர் போராட்டம் இடம்பெறும் கொட்டகைக்கு முன்பாக சமூக இடைவெளியை பேணி முகக்கவசம் அணிந்து தங்கள் நியாயமான கோரிக்கையை முன்வைத்து கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை இன்று முன்னெடுத்தனர்.

## கருணாவின் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பொன்றில், "பிரதமர் என்னிடம் பேசினார். இம்முறை தேசிய பட்டியலில் நாடாளுமன்றத்துக்குப் பிரவேசியுங்கள். ஏன் சிரமப்படுகின்றீர்கள்? என்று கேட்டார். அதற்கு நான், இம்முறை போட்டியிட்டுகின்றேன். கட்டாயம் வெற்றி பெறுவேன் என்று கூறினேன். நான் கொரோனாவை விடவும் ஆபத்தானவன் என்று காரைத்தீவு தவிசாளர் கூறியிருந்தார். ஆம் நான் அவ்வாறானவன்தான். கொரோனாவால் 9 பேர் மாத்திரமே உயிரிழந்தனர். ஆனால் நாம் ஒரே இரவில் இரண்டாயிரம் - மூன்றாயிரம் இராணுவத்தினரைக் கொன்றுள்ளோம். அனைவரும் அறிவீர்கள்தானே? கிளிநொச்சியில் ஆயிரக்கணக்கான இராணுவத்தினரைக் கொன்றோம்." - என்று கருணா அம்மான் கூறியுள்ளார்.

இவரால் முன்வைக்கப்பட்டுள்ள இந்த கருத்துக்கள் நாட்டின் சட்டக் கட்டமைப்புக்குப் பாரிய சவாலை ஏற்படுத்தியுள்ளது. அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் தேசப்பற்று பற்றி தெற்கில் பேசுபவர், வடக்கு - கிழக்கில் ஆயிரக்கணக்கான இராணுவ வீரர்களைக் கொன்றார் எனக் கூறி தமிழ்பேசும் மக்களிடம் வாக்குகளைப் பெற முயற்சிப்பது கவலைக்குரியதாகும்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கருணா அம்மான் போன்ற சந்தர்ப்பவாதிகளுக்கு அவரது கட்சியில் பதவிகளை வழங்கியிருப்பதன் அரசியல் நோக்கம் என்ன ? மேலும் நாட்டு மக்களை ஏமாற்றுவதற்கு அறிவுள்ள மக்கள் சமூகம் இடமளிக்கப் போவதில்லை - என்றார்

## 3,000 ராணுவத்தி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாவிதன்வெளி பிரதேசத்தில் மக்கள் கூட்டமொன்றில் உரையாற்றிய தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அம்பாறை மாவட்ட வேட்பாளருமான விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்), இம்முறை தேர்தலில் போட்டியிட்டு எனது மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொண்டு வருகின்றேன் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கூறினேன் என்றும், கொரோனாவின் காரணமாக 9 பேர் தான் உயிரிழந்தார்கள். எனினும், நாம் ஆனையிறவில் ஒரே இரவில் 2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் வரையிலான இராணுவத்தினரைக் கொலை செய்தோம் என்றும் வெளியிட்ட கருத்துக்கள் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளன.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பிறந்தநாளுக்குத் தனது 'ருவிட்டர்' பக்கத்தில் வாழ்த்துத் தெரிவித்திருக்கும் மங்கள சமரவீர மேற்கண்டவாறு கேள்வியும் எழுப்பியுள்ளார்.

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தீவிரமாகும் இராணுவப் பிடி!

**இலங்கை நிலைமை தொடர்பாக மற்றொரு அறிக்கை ஜெனீவா ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**

**இலங்கையில் போர் முடிந்து பத்து ஆண்டுகள் கடந்து விட்ட போதும் கூட இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகள் தீவிர இராணுவ மயமாக்கப்பட்டுள்ளன. இராணுவத்தின் கண்காணிப்புகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

**ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் கிளெமென்ற் நயா லெட்சோசி வோல், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் சமர்ப்பித்துள்ள இலங்கை தொடர்பான அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.**

**யுத்தம் முடிந்து பத்து வருடங்கள் குறித்தே இந்த அறிக்கை பேசுவதால் இது கடந்த வருடத்துக்குரிய அவதானிப்பு நிலைமையாகும்.**

**இப்போது யுத்தம் முடிந்து பதினொரு வருடங்கள் கடந்து விட்ட பிறகு நிலைமை மேலும் மாற்றமடைந்துள்ளது.**

**இராணுவ மயப்படுத்தப்பட்ட நிலைமை வடக்கு, கிழக்கு வெளியிலும் இப்போது வியாபித்து விரிவடைந்து வருகின்றது.**

**வெறுமனே இராணுவப் பிடி என்பது பௌதீக கட்டமைப்பு ரீதியான ஆதிக்கம் என்பதைத் தாண்டி, அரச நிர்வாக கட்டமைப்பையே கைப்பற்றி ஆக்கிரமித்துக் கபளீகரம் செய்யும் நிலைமையை நோக்கி விவகாரம் பெருத்து வருகின்றது.**

**இலங்கையில் சிவில் சமூகப் பிரதிநிதிகள் இராணுவத்தினரால் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். ஊடகங்களும் பாதுகாப்பு அமைச்சால் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன என்று மட்டுமே மேற்படி ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை கூறுகின்றது.**

**ஆனால் கோட்டாபய ராஜபக்ஷ புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் நிலைமை முற்றிலும் மோசமாகி விட்டது.**

**தனித்து முப்படைகள் மற்றும் பொலிஸாரைக் கொண்ட செயலணி ஒன்றை அறிவித்து, நாட்டின் சகல அரச கட்டமைப்பின் மீதும் அந்தச் செயலணி செல்வாக்கும், அதிகாரமும் செலுத்தும் ஓர் உத்தரவை அவர் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தியிருக்கின்றார்.**

**வடக்கும், கிழக்கும் முழுமையாக இராணுவ மயப்படுத்தப்பட்டிருப்பது ஒரு விடயம். இங்கு படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். பொதுமக்களின் காணிகள், பூமிகளை வல்வந்தமாக ஆக்கிரமித்து நிற்கும் படைகள் அவற்றை மீளத் தர மாட்டோம் என்ற அறிவிப்புக்ளை விடுக்கின்றன. இராணுவ உளவுப் பிரிவுகளினால் பொதுமக்கள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றனர். மக்களின் சமூகக் கட்டமைப்பின் மீது ஓர் இராணுவ வலை பின்னப்பட்டு போர்த்தப்பட்டிருக்கின்றது. அந்த இராணுவ வலைக்குள் சிக்குண்டவர்களாக வடக்கு, கிழக்கு மக்கள் வாழ்கின்றனர்.**

**யுத்தம் முடித்து பதினொரு வருடங்களின் பின்னரும் வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் தொடர்ந்து சந்தேகக் கண்ணோடே – ஆயுதம் தாங்கிய 'பயங்கரவாதிகள்' என்ற நோக்கிலேயே – இன்னும் அவதானிக்கப்படுகின்றார்கள்.**

**சமூகத்தின் மீது அமைதியான – சமாதானமான – புரிந்துணர்வுமிக்க – ஒரு பார்வையைச் செலுத்த மறுக்கும் ஆட்சிப் பீடம், அச்சுறுத்தலான ஒரு சூழலுக்குள் மக்களை மடக்கி வைத்துத் தமது அதிகாரப் பிரயோகத்தை உறுதிப்படுத்தும் நிலைமையைப் பேணவே விரும்புகின்றது என்பது வெளிப்படையாகத் தெரியும் அம்சமாகும்.**

**இராணுவப் பிரசன்னத்தின் நெருக்குவாரங்களை – அழுத்தங்களை – எரிச்சலை – வடக்கு, கிழக்கு மக்கள் கால் நூற்றாண்டுக்கு மேல் தொடர்ந்து அனுபவித்து வருகின்றனர்.**

**ஆனால், அதற்கு மாறாக இப்போது வடக்கு, கிழக்குக்கு வெளியே முழு நாடுமே இந்த இராணுவ ஆட்சி முறை அழுத்தத்தை எதிர்கொள்ளப் போகின்றது.**

**ஆனால் வடக்கில் இருப்பது போல நேரடியாகப் பல்லாயிரம் இராணுவத்தினரின் பிரசன்னத்துடன் கூடிய அழுத்தமாக அது இல்லாமல் இருக்கலாம். திரும்பிய பக்கம் எல்லாம் சீருடையினர் நிலை கொண்டிருக்கும் நிலைமை வடக்கு, கிழக்குக்கு வெளியே இல்லாமல் இருக்கலாம்.**

**ஆனால், அரசு போகின்ற போக்கில், கோட்டாவின் இராணுவ அணுகுமுறை தீவிரமடைந்து வரும் நிலையில், எங்கும், எதிலும், எப்படியும் இராணுவ மேலாதிக்கம் ஓங்கியிருப்பதை முழு இலங்கைத் தீவுமே பட்டுணரும் நிலைமையை மிக விரைவில் எதிர்கொள்ளும் என்பது தவிர்க்க முடியாத கட்டாயமாகும் என்பது தெளிவு.**

# ரணில், சஜித் போன்ற சில்லறைகளினால் ராஜபக்ஷக்களை தோற்கடிக்க முடியாது!

## முன்னாள் அமைச்சர் அதாவுல்லா திட்டவட்டம்

தென்னிலங்கையில் ஆழமாகக் காலூன்றி வரும் சிங்களத் தலைமைக்கு நிகராக இன்னுமொரு தலைமை உருவாகும் வரை ரணில், சஜித் போன்ற சில்லறை அணிகளினால் ராஜபக்ஷக்களைத் தோற்கடிக்க முடியாது.

- இவ்வாறு தேசிய காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமமான ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்தார்.

நல்லாட்சி அரசில் ஆறடி நிலத்தில் கூட அபிவிருத்தி செய்யாத முஸ்லிம் தலைமைகள் இன்று ஆகாயத்தில் கோட்டை கட்டப் போவதாக, உரிமை அரசியல் பேசுவது இந்த ஆண்டின் அதிசிறந்த நகைச்சுவையாகப் பதியப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சமகால அரசியல் குறித்து கொழும்பில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெருந்தலைவர் அஷ்ரஃபின் அரசியல் வழிகாட்டல்களைப் புறந்தள்ளி அரசியல் செய்த சில தலைமைகள் இன்று இரண்டுங்கெட்டான் நிலைக்குள் மாட்டியுள்ளன.

சமூகத்தின் உண்மையான எதிர்பார்ப்புக்களை உணர்ச்சி வசப்படுத்தி மழுங்கடித்த இத்தலைமைகள், கடந்த நல்லாட்சி அரசில் எதையும் செய்யவில்லை.

ஆட்சியின் பங்குதாரர்களென மார்பு தட்டித் திரிந்த சிலரால் முஸ்லிம் பிரதேசங்களில் ஆறடி நிலத்தைக் கூட அபிவிருத்தி செய்ய முடியாமல்போனது. திறைசேரிக் கொள்ளையர்களைக் காப்பாற்றி எமது நாட்டின் சொத்துக்களைச் சூறையாடுவதற்கே இவர்கள் துணை போயுள்ளனர்.

அடிப்படைவாதம், பயங்கரவாதம், பிரிவினைவாதங்களுக்கு எதிராகச் செயற்பட்டு தேசப்பற்றை வெளிப்படுத்தி வந்த முஸ்லிம்களை, சகோதர சமூகங்கள் சந்தேகக் கண்ணுடன் நோக்கும் நிலைமையை கடந்த நல்லாட்சி அரசே ஏற்படுத்தியது. எம்மக்களுக்கு இன்று தேவைப்படுவது உணர்ச்சி வசப்படுத்தும் வாக்குறுதிகளல்ல.

மக்களை நிம்மதியாக வாழவைக்கும் தேவைகளே எமது தலைகளில் சுமத்தப்பட்டுள்ளது. இந்தத் தேவைகள், உரிமைகளை வென்றெடுப்பதற்கு பலமான அரசு அவசியம்.

ரணில், சஜித் என இன்று ஐக்கிய தேசியக் கட்சி பிளவுபட்டுள்ள இலட்சணத்தில், இவர்களால் பலமான அரசல்ல, பலமான எதிர்க்கட்சியாகவும் வர முடியாது. எனவே, முஸ்லிம் சமூகம் உணர்ச்சி அரசியலிலிருந்து அவசரமாக விடுபட வேண்டும். உணர்ச்சி வசப்பட்டதால் சிறுபான்மைச் சமூகங்கள் அபிவிருத்தி உள்ளிட்ட உரிமைகளை வெல்வதிலிருந்து தூரமாக்கப்பட்ட வரலாறுகளே அதிகம்.

தென்னிலங்கையில் ஆழமாகக் காலூன்றி வரும் சிங்களத் தலைமைக்கு நிகராக இன்னுமொரு தலைமை உருவாகும் வரை ரணில், சஜித் போன்ற சில்லறை அணிகளினால் ராஜபக்ஷக்களைத் தோற்கடிக்க முடியாது. எனவே, தென்னிலங்கைச் சமூகங்களுடன் இயைந்து செல்லும் அரசியல் தலைமை பற்றியே முஸ்லிம்கள் சிந்திக்க வேண்டும். இதைவிடுத்து தொடர்ந்தும் பெரும்பான்மை சமூகங்களின் சந்தேகங்களுக்குள்ளாகும் அரசியல் சூழலை ஏற்படுத்துவது ஆபத்தாகவே அமையும் - என்றார்.

# குற்றவாளிகளுக்குரிய பயிற்சி நிலையமாக சிறைச்சாலைகள்

## சட்டமா அதிபர் கடும் ஆவேசம்

குற்றங்களைச் செய்வதற்கு பயிற்சியளிக்கும் இடமாக தற்போது சிறைச்சாலைகள் காணப்படுகின்றன. இதனால் குற்றவாளிகளின் விளையாட்டு மைதானமாக சிறைச்சாலைகள் உள்ளன.

- இவ்வாறு கடும் விசனம் தெரிவித்தார் சட்டமா அதிபர் தபுல டி லிவேரா.

சிறைச்சாலைகள் தொடர்பில் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை முற்றாக வீழ்ச்சியடைந்துள்ளதால் நேர்மையான, செயற்றிறன் மிக்க அதிகாரிகளைத் தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்புவிளக்கமறியல்சிறைச்சாலைக்கு நேற்று கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டபோது சிறைச்சாலை அதிகாரிகள் முன்னிலையில் உரையாற்றும்போதே சட்டமா அதிபர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தாவது:-

எனக்கு இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தமைக்கு சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்துக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். சிறைச்சாலைக்கு உத்தியோகபூர்வமாக வருகை தந்த முதலாவது சட்டமா அதிபர் நான் என்பதில் பெருமையடைகின்றேன். சிறைச்சாலை அதிகாரிகளுக்கு மிக முக்கியமான விடயத்தை வலியுறுத்துவதற்காகவே நான் இங்கு வருகை தந்தேன்.

சிறைச்சாலை ஆணையாளர் நாயகமாக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள துஷார உப்புல்தெனிய பாரிய பொறுப்புக்கள் உள்ளன. அந்தப் பொறுப்புக்களை இலகுவாக நிறைவேற்றிவிட முடியாது. அவற்றை நிறைவேற்றுவதற்கு அனைத்து சிறைச்சாலை அதிகாரிகளினதும் ஒத்துழைப்பும் அர்ப்பணிப்பும் அத்தியாவசியமானதாகும்.

நாம் தற்போது நேர்மையான செயற்றிறன் மிக்க அதிகாரிகளையே எதிர்பார்க்கின்றோம். நேர்மையாக சட்ட ரீதியாக செயற்படுகின்ற அதிகாரிகள் நிச்சயம் தெரிவுசெய்யப்பட வேண்டும். அந்தவகையில் சிறைச்சாலை அதிகாரிகளாகிய நீங்கள் நாட்டில் மிக முக்கியமான பங்கு வகிக்கின்றவராவீர்கள்.

சிறைச்சாலைகள் தொடர்பில் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை முற்றாக வீழ்ச்சியடைந்துள்ளது. நாம் நேரடியாகப் பேசுவோம். இங்கு எவ்வாறான நிலைமை காணப்படுகிறது என்பதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். உங்களது உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின்னரே இங்கு வருகை தந்துள்ளேன். அத்தோடு அங்கிருந்து எனக்கு கிடைக்கப் பெறும் தகவல்களும் உள்ளன.

இங்கு சில ஊழலில் ஈடுபடும் அதிகாரிகள் உள்ளனர். அந்த அதிகாரிகள் யார் என்று இனங்காண வேண்டும். தற்போது காணப்படும் நிலைவரத்துக்கு அமைய சிறைச்சாலைகள் குற்றவாளிகளின் விளையாட்டு மைதானமாக மாறியுள்ளது. குற்றச் செயல்களைச் செய்வதற்காக பயிற்சியளிக்கும் தளமாகவே சிறைச்சாலைகள் காணப்படுகின்றன. இங்கு ஒழுக்கமின்மையே இதற்கான காரணமாகும்.

சிறைச்சாலைகளுக்குள்ளேயே குற்றங்கள் முகாமைத்துவம் செய்யப்படுகின்றன. பாதாள உலகக் குழுவினர் இதற்குள் உள்ளனர். அதனை நீங்கள் அறிவீர்கள். சிறைக்குள் ஒரு தொகுதியினரும் வெளியில் ஒரு தொகுதியினரும் உள்ளனர். இந்த இரு பிரிவினரும் இணைந்து நாட்டில் பல்வேறு குற்றச் செயல்களை முன்னெடுக்கின்றனர். கையடக்கத் தொலைபேசி பாவனை மூலமே இவர்கள் செயற்படுகின்றனர். அவை நிறுத்தப்பட வேண்டும். ஆனால், இங்கு அதிகாரிகள் சேவையாளர்களாகியுள்ளனர். இவற்றை நிறுத்த முடியும் என்று உங்களை ஊக்கப்படுத்தவே நான் இங்கு வருகை தந்தேன் - என்றார்.

# ஒழுக்கமற்ற இந்தியச் சிப்பாய்களே எல்லை மோதலுக்கு முழுக்காரணம்

## நடந்தது இதுதான் – விளக்கமளிக்கிறது சீனா

இந்தியா - சீனா எல்லையில் நடந்த மோதல் குறித்த விவரங்களைச் சீன வெளியுறவு அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் ட்சௌ லிஜியான் விளக்கினார். இந்த மோதலுக்கு எல்லை முன்னரங்கிலுள்ள இந்திய இராணுவத்தினரின் ஒழுக்கமற்ற செயற்பாடே காரணம் என்று அவர் சுட்டிக்காட்டினார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த மே மாதம் 6ஆம் திகதி அதிகாலை எல்.ஏ.சி. பகுதியைக் கடந்து வந்திருந்த இந்திய படையினர், சீன பிராந்தியத்துக்குள் அத்துமீறி நுழைந்ததுடன், தடுப்புகளையும் மணல் அரண்களையும் கட்டினர். அதை சீன ரோந்துப் படையினர் தடுத்தார்கள். அப்போது வேண்டுமேன்றே ஆத்திரமூட்டும் செயற்பாடுகளில் ஈடுபட்ட இந்தியப் படையினர், தன்னிச்சையாக அந்த பகுதியின் கட்டுப்பாட்டு நிலையை மாற்றி, அதை நிர்வகிக்க முற்பட்டார்கள். இதனால், களத்தில் உள்ள நிலைமைக்கு ஏற்ப தேவையான நடவடிக்கை எடுத்து எல்லைப் பகுதிகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் கட்டாயத்துக்குச் சீனப் படையினர் தள்ளப்பட்டார்கள்.

இந்த நிலைமையைத் தணிப்பதற்காகச் சீனாவும், இந்தியாவும் இராணுவ அளவிலும், ராஜீய வழிகளிலும் தொடர்பு கொண்டு பேசின. எல்.ஏ.சி. பகுதியை கடந்து வந்த தமது சிப்பாய்களைத் திரும்ப அழைத்துக் கொண்டு, அங்கு நிறுவப்பட்டவற்றை அழிக்க இந்தியா சம்மதித்தது. அதன்படியே செய்தது. கல்வான் நதியின் முகப்புப் பகுதியைக் கடந்து வந்து ரோந்துப் பணியிலோ, வேறு அமைப்புகளையோ நிறுவ மாட்டோம். களத்தில் உள்ள கட்டளை அதிகாரிகள் (மேஜர் ஜெனரல்கள்) இடையே கூட்டங்கள் நடத்தி, பகுதி, பகுதியாக படையினரை அங்கிருந்து விலக்குவது பற்றி விவாதிப்போம் என இந்தியா தரப்பில் உறுதியளிக்கப்பட்டது.

ஆனால், அதிர்ச்சி தரும் வகையில், கடந்த 15ஆம் திகதி மாலையில், இந்தியாவின் எல்லை முன்னரங்கில் இருந்த படையினர், கட்டளை அதிகாரிகள் (எல்லை பிராந்திய கமாண்டர்கள் அல்லது மேஜர் ஜெனரல்கள்) கூட்டத்தில் எட்டப்பட்ட உடன்பாட்டை மீறி மீண்டும் எல்ஏசி பகுதியைக் கடந்து வந்தார்கள். பதற்றம் தணிந்து வந்த சூழலில், சீன அதிகாரிகள் மற்றும் சிப்பாய்களைக் கடுமையாக தாக்கினார்கள். அது பின்னர் கைகலப்பாக மாறிக் கடுமையாகக் காயம் ஏற்படுத்திக் கொள்ளும் அளவுக்குத் தாக்கிக் கொள்ளும் மோதலாக மாறியது. இந்தியச் சிப்பாய்களின் சாகச செயற்பாடுகள், எல்லை பகுதிகளின் ஸ்திரத்தன்மையை மட்டுப்படுத்தியது மட்டுமின்றி, சீனபடையினரின் உயிருக்கும் அச்சுறுத்தலாகின.

இது தொடர்பாக தமது கடுமையான ஆட்சேபத்தையும், முறைப்பாட்டையும் இந்தியாவிடம் சீனா பதிவு செய்தது. இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கருடன் சீன வெளியுறவு அமைச்சர் வாங் யீ தொலைபேசியில் பேசினார். அப்போது சீனாவின் கடுமையான நிலைப்பாட்டை மீண்டும் விவரித்து, நடந்த சம்பவம் குறித்து இந்தியா முழுமையாக விசாரிக்க வேண்டும் என்றும், அதற்குப் பொறுப்பானவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். மேலும், எல்லை முன்னரங்கில் உள்ள இந்தியப் படையினர் கண்டிப்பான ஒழுக்கத்துடன் செயலாற்றி இனி அத்தகைய சம்பவங்கள் நடக்காமல் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் இந்திய அமைச்சரிடம் சீன அமைச்சர் கேட்டுக் கொண்டார்.- என்றார்.

# சீன இராணுவம் ஊடுருவவில்லை!

## இந்தியப் பிரதமர் தெரிவிப்பு



இந்திய எல்லைக்குள் சீன இராணுவம் ஊடுருவவில்லை, இந்தியாவுக்குள் ஊடுருவ முயற்சித்த சீனச் சிப்பாய்களுக்குத் தக்க பாடம் கற்பிக்கப்பட்டுள்ளது என்று இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்தார். எல்லை மோதல் தொடர்பாக அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் நடத்திய ஆலோசனைக் கூட்டத்திலேயே மோடி இவ்வாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

நமது நாட்டின் எல்லைக்குள் சீன இராணுவம் ஊடுருவவில்லை. இந்தியாவுக்குள் ஊடுருவ முயற்சித்தவர்களுக்குத் தக்க பாடம் கற்பிக்கப்பட்டுள்ளது. சீனா நமது எல்லைக்குள் ஊடுருவவில்லை. நமது எந்த ஒரு நிலையையும் கைப்பற்றவில்லை. நாட்டின் ஓர் அங்குல நிலத்தின் மீதுகூட யாரும் கண் வைக்க முடியாத அளவுக்கு நமது படை பலம் உள்ளது. நமது நாட்டை பாதுகாக்க தேவையான நடவடிக்கைககளை நமது ஆயுதப்படை மேற்கொள்ளும். ஒரே சமயத்தில் பல முனைகளுக்கும் செல்லக்கூடிய திறன் நாட்டின் ஆயுதப்படைகளுக்கு உள்ளது என்றார்.

# கீழடி – கொந்தகை அகழ்வில் குழந்தையின் எலும்புக்கூடு!



கீழடி அகழாய்வின் ஒரு பகுதியாக உள்ள கொந்தகையில் குழந்தை ஒன்றின் எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே கொந்தகையில் முதுமக்கள் தாழிகள் 10 கண்டறியப்பட்டன. இதில் மூன்று தாழிகளில் உள்ள எலும்புகள் மரபணுச் சோதனைக்காக அனுப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை கொந்தகையில் மேலும் ஒரு குழி தோண்டப்பட்டு அகழாய்வு நடந்தது. இதில் இரண்டு முதுமக்கள் தாழிகள் கண்டறியப்பட்டன. மறுநாள் வெள்ளிக்கிழமை நடந்த அகழாய்வில் குழந்தையின் எலும்புக்கூடு ஒன்று முழு அளவில் கிடைத்துள்ளது. கொந்தகை ஈமக் காடாக இருந்த இடம் என்பதால் முதுமக்கள் தாழிகள் கொந்தகையில் அதிகளவில் கிடைத்து வருகின்றன.

இது குறித்து அங்கு அகழாய்வுப் பணியில் ஈடுபட்டு வரும் தொல்லியல் ஆய்வாளர் ஒருவர் தெரிவிக்கும்போது, இந்த எலும்புக்கூட்டின் உயரம் 75 சென்ரி மீற்றராக உள்ளது. ஆணா, பெண்ணா என்பது தெரியவில்லை. இந்த எலும்புக் கூட்டில் இடுப்பு எலும்புப் பகுதி சேதமாகியுள்ளதால் அதைக் கண்டு பிடிக்கமுடியாமல் உள்ளது. குழந்தை இறந்தபோது என்ன வயது என்பது தெரியவில்லை. எலும்புகள் மரபணுச் சோதனைக்காக மதுரை காமராஜர் பல்கலைக்கழக உயிரியல் துறையிடம் ஒப்படைக்கப்படவுள்ளன என்றார்.

# கொரோனாவுக்கு சிகிச்சையாக யோகா

தமிழகத்தில் கொரோனவால் பாதிக்கப்பட்டவர்களில் 650 நபர்களுக்கு இயற்கை மற்றும் யோகா மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு, அவர்களின் உடல்நலனில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை மருத்துவர்கள் கண்காணித்து வருகிறார்கள்.

பாதிக்கப்பட்டவர்களின் பயத்தைப் போக்குவது, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பது ஆகியவை இதன் குறிக்கோள். சளி மற்றும் காய்ச்சல் ஆகிய அறிகுறிகள் இருந்தால், சளியை நீக்க கசாயங்கள், மூச்சுப் பயிற்சி வழங்கப்படுகின்றன.

கொரோனாத் தொற்று உள்ளவர்களுக்கு அரச மருத்துவமனைகளில் இந்த இயற்கை, யோகா மருத்துவம் மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# எகிறுகிறது கொரோனா ஒரே நாளில் 14ஆயிரம்!

இந்தியாவில் இதுவரை இல்லாத அளவில் ஒரே நாளில் 14ஆயிரத்து 516 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்திய சுகாதாரத்துறை வெளியிட்ட தகவலின்படி இந்தியாவில் கொரோனாத் தொற்று 4இலட்சத்தை நெருங்கி உள்ளது.

இதுவரை 3இலட்சத்து 95ஆயிரத்து 48 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தியாவில் இதுவரை இல்லாத அளவில் நேற்று மட்டும் 14ஆயிரத்து 516 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 375 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்க ளின் எண்ணிக்கை 12ஆயிரத்து 948 ஆக உயர்ந்துள்ளது. இதுவரை 2இலட்சத்து 13ஆயிரத்து 831 பேர் கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்துள்ளனர். நாடு முழுவதிலும் 1இலட்சத்து 68ஆயிரத்து 269 பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.









# கருத்துக் கணிப்பில் ட்ரம்புக்கு பின்னடைவு

அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடக்க விருக்கின்ற ஜனாதிபதித் தேர்தல் குறித்து நடந்த கருத் துக்கணிப்பு ஒன்றில் அமெரிக்காவின் தற்போதைய அதிபர் ட்ரம்புக்குப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இந்தத் தேர்தலில் ட்ரம்பை எதிர்த்து ஜனநாயக கட்சி சார்பில் முன்னாள் துணை ஜனாதிபதி ஜோ பிடன் களமிறங்கியிருக்கிறார். தேர்தலில் மக்களின் ஆதரவு யாருக்கு என்பது குறித்துக் கணிப்புகள் நடத் தப்பட்டு வருகின்றன. இந்த வகையில் அமெரிக்கா வின் கின்னிபியாக் பல்கலைக்கழகம் நாடளாவிய ரீதியில் நடத்திய கருத்துக்கணிப்பில் ட்ரம்புக்கு ஆதர வாக 41 சதவீதம் பேர் வாக்களித்தனர். ஜோ பிடனுக்கு 49 சதவீதம் பேர் வாக்களித்தனர். ட்ரம்பை விட ஜோ பிடன் முன்னிலையில் உள்ளார்.

# கொரோனாவிலும் கொடியது அமெ. – சீனா வர்த்தகப் போர்!



பீஜிங், ஜூன் 20

உலக பொருளாதாரத்தின் விநியோகச் சங்கிலிகளையும் தேவையையும் சீர்குலைத்துள்ளது கொரோனா வைரஸ். ஆனால் அதைவிட அமெரிக்க – சீனா வர்த்தகப் போர் ஐரோப் பாவுக்குப் பெரும் பாதகத்தை ஏற்படுத் தும் என்று ஐரோப் பிய ஒன்றியம் சார்பில் சீனாவின் தலைமைப் பிரதிநிதியாக இருக்கின்ற ஜோர்ஜ் வுட்கே கூறினார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கும் போது, இரண்டு யானைகள் (அமெ ரிக்கா – சீனா) நடன மாடும்போது பாதிக்கப்படாமல் ஒதுங்கி நிற்பது கடினம். ஆனால் கொரோனா வைரஸ் என்பது கையா ளக்கூடிய ஒரு சவால். கொரோனா வைரஸ் ஏற்படுத்திய நிச்சயமற்ற தன்மையால் ஐரோப்பிய நாடுகள் தற்போது இருட்டில் பயணிக்கின்றன. ஆயினும்கூட, அமெரிக் காவுக் கும் சீனாவுக்கும் இடையிலான மோதலில் சிக்கிக்கொள் வது நீண்ட கால அச்சுறுத்தலாக அமையும். அமெரிக்க – சீனா வர்த்தகப் போர், தொழில்நுட்ப போர், நிதிப் போரின் சாத்தியம், நீண்ட காலத்துக்கு நீடிக்கும், இது மிகவும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றார்.

# ஜோன் போல்டன் துரோகி மைக் பாம்பியோ தெரிவிப்பு

அமெரிக்காவின் முன் னாள் பாதுகாப்பு ஆலோ சகரான ஜோன் போல் டனைத் துரோகி என் றுள்ளார் அமெரிக்கா வின் வெளியுறவுத்துறை அமைச்சர் மைக் பாம் பியோ.

'வெள்ளை மாளிகை நினைவுகள்' என்றதலைப் பில் புத்தகம் ஒன்றை எழுதியுள்ளார் ஜோன் போல்டன். வெளியாகாத அந்தப் புத் தகத்தின் ஒரு பகுதி அமெரிக்கப் பத்தி ரிகைகள் சிலவற்றில் வெளியகியது. ட்ரம்ப் சீன அதிபர் ஜி ஜின்பிங்கிடம் தனிப்பட்ட முறையில் தேர்தலில் தான் வெற்றி பெற உதவுமாறு கேட் டுக்கொண்டதாகப் போல் டன் அந்தப் புத்தகத்தில் கூறியுள்ளார்.

போல்டன் தனியார் தொலைக்காட்சி ஒன் றுக்கு அளித்த பேட்டியில், டொனால்ட் ட்ரம்ப் அமெ ரிக்க அதிபர் அலுவலகத் திற்குப் பொருத்தமற்றவர் என்றும், அதிபர் வேலை களைச் செய்யக்கூடிய திறமை அவரிடம் இல்லை என்றும் தெரிவித்தார்.

இந்த நிலையிலேயே ஜோன் போல்டன் அரை குறை உண்மைகளுடன் பொய்களைப் பரப்பிவருகி றார். அவர் துரோகியாக மாறி அமெரிக்க மக்களின் நம்பிக்கையை மீறியுள் ளார் – என்று மைக் பாம் பியோ தெரிவித்துள்ளார்.

# ஐவரி கோஸ்ட்டில் நிலச்சரிவு 13 பேர் பரிதாபகரமாக சாவு



மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான ஐவரி கோஸ்ட் டில் ஏற்பட்ட நிலச்சரிவில் 13 பேர் உயிரிழந்தனர். அந்த நாட்டின் தலைநகர் அபிட்ஜனில் கடந்த சில நாள்களாக இடைவிடாது பெய்துவருகின்ற கடும் மழை காரண மாக அங்குள்ள பல்வேறு நகரங்கள் வெள்ளக்காடாகியுள் ளன. நூற்றுக்கணக்கான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின.

இந்த நிலையிலேயே அபிட்ஜனையொட்டியுள்ள அனாய்மா நகரில் நேற்று முன்தினம் பெரும் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் பல வீடுகள் மண்ணுக்குள் புதைந்தன. இதில் 13 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# இந்த ஆண்டில் கொரோனா தடுப்பூசி உலக சுகாதார நிறுவனம் தகவல்




கொரோனா தடுப்பூசி இந்த ஆண்டே தயாராகிவிடும் என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்தது. சுவிட்சர்லாந் தின் ஜெனீவா நகரில் உலக சுகாதார நிறுவனத்தின் தலைமையகத்தில் தலைமை விஞ்ஞானி டாக்டர் சவுமியா சுவாமிநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித் ததாவது:

உலகமெங்கும் 200க்கும் மேற்பட்ட தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்பட்டு, அவற் றைப் பரிசோதித்துப் பார்க்கும் பணி நடந்து வருகிறது. இந்த 200 தடுப்பூசி களில் 10 தடுப்பூசிகள் ஆரம்ப கட்டப் பரி சோதனைகள் முடிந்து, மனிதர்களுக் குச் செலுத்திச் சோதித்துப்பார்க்கிற நிலைக்கு வந்து விட்டன. இந்த ஆண் டின் இறுதிக்குள் ஒன்று அல்லது இரண்டு வெற்றிகரமான தடுப்பூசிகள் வந்து விடும் – என்றார்.

ரஷ்யாவில் தடுப்பூசி கண்டுபிடித்து 18 பேருக்குச் செலுத்தப்பட்டு விட்டது. அது அவர்களுக்குப் பக்க விளைவுக ளையோ, அவர்களது உடல்நலத்தில் பாதிப்பையோ ஏற்படுத்தியதாகத் தகவல் இல்லை. ஜேர்மனியில் கியூர்வேக் நிறுவனமும் மனிதர்களுக்குக் கொரோ னாத் தடுப்பூசியைச் செலுத்திப்பார்க்கத் தயாராகி வருகிறது என்பவை குறிப் பிடத்தக்கன.



# துண்டுப்பிரசுரங்களை ஏவ தயாராகிறது வடகொரியா

தென்கொரியாவின் எல்லையில் பிரச்சார துண்டுப் பிரசுரங்களை வீசுவதற்கு வடகொரியா தயாராகி வருவதாகவும், வட கொரியாவில் இருந்து வெளியேறி யவர்களையும் தென் கொரியாவையும் கண்டித்து அந்தத் துண்டுப்பிரசுரங்கள் வீசப்படவுள்ளன என்றும் வடகொரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

கோபமடைந்த வட கொரிய மக்கள் ஒரு பெரிய மலை அளவிலான துண்டுப்பிரசுரங்களை விநியோகிப் பதற்கான ஆயத்தங்களுடன் இருக்கின்றனர் என்று வடகொரிய அரசசெய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலிருந்த தொடர்பு அலுவலகத்தை வடகொரியா குண்டு வைத்துத் தகர்த் ததிலிருந்து அங்கு பதற்றம் நிலவி வருவது குறிப்பிடத் தக்கது.



# பிரேசிலில் அதிகரிக்கிறது கொரோனா!

பிரேசிலில் கொரோனாத் தொற் றால் பாதிக்கப்பட்டவர்களின் எண் ணிக்கை 10 லட்சத்தைக் கடந் துள்ளது.

உலக அளவில் அமெரிக்கா வுக்கு அடுத்து இந்த எண்ணிக்கை யைக் கடந்த முதலாவது நாடு பிரேசில். குறைந்த அளவில் அங்கு பரிசோதனை மேற்கொள்ளப்படு கின்றன என்றும் பரிசோதனை களை அதிகரிக்கும்போது பாதிக் கப்பட்டவர்களின் எண் ணிக்கை இதைவிட அதிகமாகும் என்றும் கருதப்படுகிறது.

தற்போதைய நிலவரப்படி, பிரேசிலில் கொரோனாத் தொற் றால் பாதிக்கப்பட்டவர்களின் எண் ணிக்கை 10இலட்சத்து 38ஆயி ரத்து 568ஆக உள்ளது. இதில் ஏழை மற்றும் பழங்குடி மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸால் உலகி லேயே மிகவும் பாதிக்கப்பட்ட நாடான அமெரிக்காவில் இதுவரை 22இலட்சத்து 97ஆயிரத்து 190 பேருக்குத்தொற்று உறுதிசெய்யப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







## வேப்ப மரக்குற்றிகளுடன் ஒருவர் வவுனியாப் பொலிஸாரால் கைது

வவுனியா,ஜூன்21

வவுனியா, உக்கிளாங்குளம் பகுதியில் கப் ரக வாகனத்தில் ஏற்றப்பட்ட வேப்ப மரக் குற்றிகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, உக்கிளாங்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் வேலி ஓரமாக நின்ற வேப்ப மரம் வெட்டப்பட்டு கப் ரக வாகனத்தில் ஏற்படுவதாக 119 இலக்கம் மூலம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து விரைந்து செயற்பட்ட வவுனியா பொலிஸார் அந்த இடத்திற்குச் சென்று 6 வேப்ப மரக்குற்றிகளுடன் கப்ரக வாகனத்தைக் கைப்பற்றியுள்ளமையுடன் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின் அந்த நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் கூறினர்.

## மனித குலத்திற்கு எதிரான பாரதூரமான படுகொலைகளை செய்தமையை ஒப்புக்கொண்ட கருணாவைக் கைது செய்க!

### ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் ‘சிங்கள ராவய’ அமைப்பு வேண்டுகோள்

கொழும்பு,ஜூன்20

மனித குலத்திற்கெதிரான பாரதூரக் கொலைகளைச் செய்த முன்னாள் பிரதியமைச்சரும், பொதுஜன முன்னணியின் வேட்பாளருமான விநாயகமூர்த்தி முரளிதரனை கைது செய்யும்படி, சிங்கள ராவய அமைப்பு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

வன்னியில் இடம்பெற்ற போரின் போது 2000 தொடக்கம் 3000 வரையிலான ஶ்ரீலங்கா படையினரை ஆனையிறவு பகுதியில் வைத்து ஒரே இரவில் தாம் படுகொலை செய்ததார் எனக் கருணா அம்மான் நேற்றைய தினம் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார்.

இக்கருத்து தற்போது தென்னிலங்கையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறது.

கொழும்பில் இன்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய சிங்கள ராவய அமைப்பின் பொதுச் செயலாளர் மாகல் கந்தே சுதத்த தேரர் கருணா அம்மானைக் கைது செய்யும்படி கோரிக்கையினை முன்வைத்துள்ளார்.

தொடர்ந்தும் பேசிய அவர் -

ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளராக களமிறங்கியுள்ள விநாயகமூர்த்தி என்று சொல்லப்படும் கருணா உடலை உலுக்கும் வகையிலான மிகவும் பாரதூரமான கருத்தொன்றை வெளியிட்டுள்ளார்.

ஆனையிறவு பகுதியில் ஶ்ரீலங்கா படையைச் சேர்ந்த இராணுவத்தினர் 2000 அல்லது 3000 பேரை தான் கொலை செய்ததார் எனக் கூறியுள்ளார். இது ஶ்ரீலங்கா சட்டத்தின்படி முரணான அறிவிப்பாகும்.

கொலைக் குற்றச்சாட்டில் அவரைக் கைது செய்ய முடியும். அவரைக் குற்றவாளியாக்க முடியும். சட்டரீதியான நடவடிக்கையும் எடுக்க முடியும்.

ஆகவே உடனடியாக அவருக்கெதிராக நடவடிக்கை எடுக்கும் படியும் பதில் பொலிஸ்மா அதிபர், குற்றப் புலனாய்வுப் பிரிவு ஆகியோருக்கு நினைவுபடுத்துகின்றோம்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களை இஸ்லாமிய அடிப்படைவாதக் குழுக்கள் நடத்தியிருந்தன. அதனை விடவும் மனித குலத்திற்கெதிரான பாரதூரக் கொலைகளை கருணா செய்திருப்பது அவராலே சொல்லப்பட்டுள்ளது.

ஆனையிறவு பகுதியில் மட்டுமல்ல, கிழக்கு மாகாணத்தில் அரந்தலாவ பகுதியில் பிக்குமார்களை படுகொலை செய்தமை, சில கிராமங்களுக்குள் நுழைந்து அப்பாவி மக்களை வெட்டிக் கொலை செய்தமை போன்ற செயற்பாடுகளை கருணா செய்திருக்கின்றார்.

இப்போது பகிரங்கமாகவே அவரால் செய்யப்பட்ட பாவ அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. சஹ்ரான் செய்த குற்றச் செயல்களைப் போல கருணாவும் இனப்படுகொலையை செய்துள்ளார்.

உடனடியாக அவரைக் கைது செய்ய வேண்டும். தேர்தல் பிரசாரத்தில் வைத்து அவர் செய்துள்ள அறிவிப்பின் ஊடாக நாட்டிற்கு மிகவும் ஒரு பயங்கரமான அறிவிப்பை விடுத்து மீண்டும் ஒருமுறை கருணா ஈழத்தை கேட்கின்றாரா என்கிற சந்தேகம் எழுந்துள்ளது.

ஆகவே ஜனாதிபதி மற்றும் அதிகாரிகளிடம் கருணா அம்மான் மீதான நடவடிக்கையை எடுக்க வேண்டும்படி கோருகிறோம். பல்லாயிரக்கணக்கான கொலையைச் செய்தவரை நாடாளுமன்றத்திற்குள் அனுமதிக்க முடியுமா? நாட்டின் சட்டத்திட்டங்களுக்கு சவால் விடுத்தவரை விட்டுவைக்க முடியுமா?

அதேபோல முன்பு செய்த விளையாட்டுக்களை இப்போது செய்ய முடியாது என்பதை கருணா அம்மானுக்கு நினைவூட்டுகின்றோம். - என்றார்.

## நெருப்பு வளைய சூரிய கிரகணம் நாளை தென்படும்

கொழும்பு, ஜூன் 20

‘நெருப்பு வளைய சூரிய கிரகணம்’ எனப் பெயரிடப்பட்டுள்ள 2020ஆம் ஆண்டின் முதலாவது சூரியக்கிரகணம் நாளை ஞாயிற்றுக்கிழமை நிகழவுள்ளது.

இதன்போது இலங்கையர்களினால் சூரிய கிரகணத்தை பார்வையிட முடியும் எனக் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் சந்தன ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

நாளை முற்பகல் 9.15 மணி தொடக்கம் பிற்பகல் 3.04 வரை சூரிய கிரகணம் நீடிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை முற்பகல் 10.20 அளவில் சூரியகிரகணத்தை பகுதியளவில் கொழும்பு நகரில் பார்வையிட முடியும் எனவும் கொழும்பு பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் சந்தன ஜயரட்ன குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை முற்பகல் 10.24 முதல் யாழ்ப்பாணத்திலும் முற்பகல் 10.34 முதல் மாத்தறையிலும் சூரிய கிரகணத்தை பகுதியளவில் பார்வையிட முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikathir

சித்திரப்போட்டி

தினம் ஒரு தலைப்பு

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு

நாளைய (21.06.2020) தலைப்பு
பாடசாலை

சித்திரங்கள் தெளிவான முறையில் படம் பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

## சுன்னாகத்தில் கைதான 24 இளைஞர்களதும் பெற்றோர்களை நீதிமன்றில் முற்பட உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன்20

சுன்னாகத்தில் நான்கு நாள்களின் முன்னர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட 24 இளைஞர்களினதும் பெற்றோரை 22ஆம் திகதி திங்கட்கிழமை நீதிமன்றத்தில் முற்படுமாறு யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.பீற்றர் போல் உத்தரவிட்டார்.

ஆள்களற்ற வீடு ஒன்றில் கூடி பிறந்த நாள் ‘கேக்’ வெட்ட முயன்ற 26 இளைஞர்களை செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுக் காவலர்கள் கைது செய்தனர்.

யாழ்ப்பாணம், நெல்லியடி, முல்லைத்தீவு போன்ற பல இடங்களிலும் இருந்தும் இந்த இளைஞர்கள் அந்த இடத்தில் ஒன்றுகூடியிருந்தனர்.

‘ஆவா’ எனப்படும் வன்முறைக் கும்பலைச் சேர்ந்த தலைவர் ஒருவரின் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக மட்டுமல்லாமல் பெரியளவிலான குற்றச் செயலைத் திட்டமிடுவதற்காகவும் தமது குழுவை மீளமைக்கும் முயற்சியாகவும் இவர்கள் ஒன்றுகூடினார்கள் என்று தமது முதலறிக்கையை நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தனர் பொலிஸார்.

கைது செய்யப்பட்டவர்களின் விவரங்கள் வடக்கில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுக் குற்றச் செயல்களுடன் அவர்களுக்குத் தொடர்புகள் இருக்கின்றனவா என்பதைக் கண்டறிவதற்குத் தாம் முயற்சிகளை எடுத்துள்ளமையால் அதற்குக் கால அவகாசம் வழங்கும் வகையில் இவர்களை விளக்கமறியலில் வைக்க வேண்டும் என்று யாழ். பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி சிரேஷ்ட இன்ஸ்பெக்டர் பிரசாத் பெர்னான்டோ நீதிவானிடம் தெரிவித்தார்.

இதையடுத்து, சந்தேகநபர்களில் 24 பேரை ஜூன் 30ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைத்த நீதிவான், 16 வயதுக்குக் குறைந்த சிறுவர்கள் இருவரை மட்டும் பிணையில் விடுவித்தார்.

விளக்கமறியலில் உள்ள சந்தேகநபர்கள் சார்பில் நேற்று முன்தினம் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் அணைத்த சட்டத்தரணி கௌதமன், அவர்களுக்குப் பிணை வழங்கவேண்டும் என்று விண்ணப்பித்தார்.

விண்ணப்பம் மீதான பரிசீலனையை திங்கட்கிழமைக்கு ஒத்திவைத்த நீதிவான், அன்றைய தினம் சந்தேகநபர்கள் அனைவரது பெற்றோரையும் நீதிமன்றில் முற்பட்டிருக்குமாறு உத்தரவிட்டார்.

# ஞானசார தேரர் குற்றஞ்சாட்டுபவர்கள் அனைவரையும் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைக்கு அழையுங்கள்

## முன்னாள் அமைச்சர் ரிஷாத் வேண்டுகோள்



(அஸீம் கிலாப்தீன்)

**இஸ்லாத்துக்கு எதிராகவும் இஸ்லாமிய தஃவாஅமைப்புக்களுக்கு எதிராகவும் ஞானசார தேரர் தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றமையால், அவரது குற்றச்சாட்டில் சம்பந்தப்பட்டஅனைவரையும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு விசரணைக்கு அழைத்து, உண்மைத்தன்மையை வெளிப்படுத்துவதன் மூலமே மக்களுக்கு சரியான தகவல்களை கொண்டு சேர்க்க முடியுமென, ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணையில் சாட்சியமளித்த ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.**

ஞானசார தேரரின் மோசமான, பிழையான கருத்துக்களை சில ஊடகங்களும் தூக்கிப்பிடித்துகொண்டு காவித்திரிகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார். இவ்வாறான செயற்பாடுகளினால் பெரும்பான்மையின மக்கள், இந்த நாட்டில் ஆயிரம் வருடங்களுக்கு மேலாக வாழும் முஸ்லிம் மக்கள் மீது வெறுப்படைந்து, அதன் மூலம் சமூகங்களுக்கிடையில் பிளவுகளும் பிரச்சினைகளும் ஏற்பட காரணமாக அமைந்துவிடுமோ என தாம் அச்சமடைகிறார் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

ஞானசாரதேரர்குற்றஞ்சாட்டுபவர்களைவிசாரணைக்கு அழைப்பது மாத்திரமின்றி, அவர்களின் கருத்துக்களுக்கு உரிய பிரசாரங்களையும் வழங்க, ஜனாதிபதி ஆணைக்குழு செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் முன்னாள் அமைச்சர் ரிஷாத், தனது சாட்சியத்தில் மேலும் வேண்டுகோள் விடுத்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று சாட்சியமளித்த பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதி செயலகம் அனுமதி மறுத்திருந்த இன்சாப் இப்ராஹிமின் ஏற்றுமதிப் பொருள்களுக்கான அனுமதியை, தனது அமைச்சினூடாகப் பெற முயன்ற அவரின் அத்தனை முயற்சிகளையும் தான் முற்றாக நிராகரித்தார் எனவும், இதனால் ஆத்திரமடைந்த இன்சாப் இப்ராஹீம், தனது அமைச்சுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் வகையில், சட்டத்தரணி ஊடாக கோரிக்கை கடிதம் (Letter of demand) அனுப்பியிருந்தார் எனவும் அவர் சொன்னார்.

இன்சாப் இப்ராஹிமின் ஏற்றுமதிப் பொருல்களுக்கான அனுமதியை ஜனாதிபதி செயலகம் நிறுத்தியிருந்தது. இவ்வனுமதியை எனது அமைச்சினூடாகப் பெறும் நோக்கில், எனது அமைச்சுக்கு வந்து, அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்திருந்தார். இவ்விடயம் கை கூடாததால், எனது சகோதரர் ரியாஜ் பதியுதீனைத் தொடர்புகொண்டு, தனது நிலைமைகளை விளக்கியுள்ளார். ஏற்றுமதிகள் தடைப்பட்டதால் கம்பனியில் பணியாற்றுவோருக்கு சம்பளம்கூடக்கொடுக்கமுடியாதநிலைஏற்பட்டுள்ளதாகவும், இதற்குப் பொறுப்பான அமைச்சரான உங்களது சகோதரரிடம் பேசி, அனுமதியைப் பெற்றுத்தருமாறும் இன்சாப் இப்ராஹீம், எனது சகோதரரான ரியாஜ் பதியுதீனைக் கேட்டுள்ளார். இது தொடர்பில் 2019 ஆம் ஆண்டு ஆறு உள் தொலைபேசி அழைப்புக்களை, அவர் எனது சகோதரருக்கு எடுத்துள்ளார் எனத் தெரிகிறது. ஆனால், எனது சகோதரர் ஒரு அழைப்பையாவது இன்சாப் இப்ராஹிமுக்கு எடுக்கவில்லை.

வியாபாரத் தொடர்பில் தெரிந்தவராகவும், எனது ஊரவர் ஒருவரின் நெருங்கிய உறவினருமாகவும் அறிமுகமான இன்சாப் இப்ராஹிமின் வேண்டுகோள் தொடர்பில், எனது சகோதரர் என்னை தொடர்புகொண்டு கேட்டபோது, ஜனாதிபதி செயலகம் அனுமதி மறுத்த விடயத்தை, என்னால் செய்ய முடியாதெனத் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டேன்.

இதுபற்றி அறிந்த இன்சாப் இப்றாஹீம் ஆத்திரமடைந்தவராக, எனது சகோதரரிடம் தொலைபேசியில் என்னை ஏசியமையுடன், கோரிக்கை கடிதம் (Letter of demand) அனுப்பவுள்ளார் எனவும் அவரிடம் தெரிவித்துள்ளார். இவர் குறிப்பிட்டது போல 2019.04.03 இல் அக்கடிதம் (Letter of demand) எனது அமைச்சுக்கு வந்தது. அவருக்கு வேண்டப்பட்டவராகவோ, விருப்பமுடையோராகவோ நாம் இருந்திருந்தால், எங்களை ஏசியது மட்டுமன்றி, சட்டத்தரணி ஊடாக கோரிக்கை கடிதமும் (Letter of demand) அனுப்பியிருக்கமாட்டார்.

இன்சாப் இப்ராஹிமுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டனர் என, 2020 ஏப்ரல்14 ஆம் திகதியன்று ஆறு பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் இன்சாப் இப்ராஹிமுடன் 250 தடவைகள் தொலைபேசியில் உள், வெளி அழைப்புக்களால் தொடர்புற்றிருந்த ஒருவர், கைதான தினமே விடுதலை செய்யப்பட்டார். மேலும், 600 தடவைகள் தொடர்புகொண்டவரும் சில நாள்களின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். ஆனால், வெறும் ஆறு உள் அழைப்புக்கள் மாத்திரமே வந்திருந்த எனது சகோதரர் ரியாஜ் பதியுதீனை மட்டும், இரண்டு மாதங்களாகத் தடுத்து வைத்துள்ளனர். அரசியல் காழ்ப்புணர்ச்சிகளின் வெளிப்பாடுகளே இவை.

அரசியலுக்காக எனது சகோதரர் போன்ற அப்பாவிகள் பழிவாங்கப்படுவது பெரும் கவலையளிக்கிறது. இந்நாட்டில் நீதி, நேர்மை நிலைக்கும் போது, உண்மை வெளிவந்து, சத்தியம் வெல்லும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது என்றும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஆணைக்குழு இன்று சுமார் ஏழு மணி நேரம், இது தொடர்பில் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனை விசாரணை செய்தது. இதன் போது, ஈஸ்டர் தாக்குதலுக்கும் தனது குடும்பத்திற்கும் எவ்விதத் தொடர்புமில்லை எனத் தெரிவித்து அவர் சாட்சிகளை முன்வைத்திருந்தார்.

# நாளை குருநாகலில் ஆட்டத்தை ஆரம்பிக்கிறது 'தாமரை மொட்டு'

## மஹிந்த தலைமையில் முதலாவது பிரசாரக் கூட்டம்

நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் அதன் தலைவரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை குருநாகலில் நடைபெறவுள்ளது.

பிரசார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் இன்று சனிக்கிழமை அநுராதபுர ஜய ஸ்ரீ மகா விகாரையில் மத வழிவாடுகளில் ஈடுபடுகின்றனர்.

இதில் கலந்துகொண்ட பின்னர் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேர்தல் பிரசாரங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

முன்னணியின் பிரதமர் வேட்பாளராக குருநாகல் மாவட்டத்தில் இலக்கம் 17 இல் போட்டியிடும் மஹிந்த ராஜபக்ஷவினால் நாளை ஞாயிற்றுக்கிழமை குருநாகலில் ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன முன்னணியின் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டு தேர்தல் பிரசாரங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக நல்லதொரு நாட்டை உருவாக்குவதே ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேர்தல் பிரசாரத்தின் முக்கிய நோக்கமாகும்.

சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கமைய தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அமுல்படுத்தப்பட்டுள்ள சுகாதார விதிமுறைகளுக்கு ஏற்பவே ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த சுகாதாரத் தரப்பினர் அறிவுறுத்தியுள்ள பாதுகாப்பு வழிமுறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டே தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் இடம்பெறவுள்ளன. அனுமதி வழங்கப்பட்டுள்ளவர்கள் மாத்திரமே பிரசாரக் கூட்டங்களில் பங்குப்பற்ற முடியும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஊடகப்பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

# கிளிநொச்சியில் கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரையின்றி நெருக்கடி

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி மாவட்டத்தின் மற்றுமோர் வாழ்வாதாரமாக விளங்கும் கால் நடை வளர்ப்பிற்குரிய இடத்தை வழுங்காதமையினால் 20 ஆயிரம் மாடுகளை வாழ்வாதாரமாக நம்பி வாழும் குடும்பங்களின் பொருளாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது.

தற்போது சிறுபோக நெற்செய்கைக் காலம். அக்காலத்தில் 15 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு எஞ்சிய நிலங்கள் கால்நடைகளின் தீவனத்திற்காக பயன்படுகின்றது. அதன் பின்பு காலபோக காலத்தில் இந்த இடங்களும் கிடைக்காது. கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது 35 ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்கள் உள்ளபோதிலும் அதில் 5 ஆயிரத்தையும் தாண்டிய அளவு நிலங்கள் வதிவிடங்களோடு காணப்படுகின்றன. இந்த நிலையில் 15 ஆயிரம் ஏக்கர் மட்டுமே சிறுபோகம் இடம்பெறும் நிலையில் எஞ்சிய 15 ஆயிரம் ஏக்கர் நிலம் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

அவ்வாறு விதைக்கப்படாது காணப்படும் 15 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் பெரும்பகுதி நிலங்கள், வயலை அண்டிய பகுதியிலேயே உள்ளன. எஞ்சிய சில பிரதேசங்களை கால் நடைகளுக்கு தீவனத்திற்கு ஏற்ற வகையில் மேய்ச்சலிற்கு பயன்படுத்த முடியும். அப்பகுதிகளும் இப்போது பயிர்ச்செய்கைக்கு உட்படுத்துவதனால் கால்நடைகளிற்கான உணவுப் பிரச்சினை பாரிய அளவில் எதிர்கொள்ள நேரிடும் என்பதனையும் நாம் மாவட்டச் செயலாளரின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளோம்.

இவற்றினைக் கருத்தில் கொண்டு கால்நடைகளிற்காக மேய்ச்சல் தரைகளை ஏற்படுத்தித் தருவதன் மூலம் முழுமையான விவசாய நடவடிக்கையினையும் மேற்கொள்ள முடியும். - என நேற்று முன்தினம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

# சிங்கப்பூரில் சிறையில் இருக்கின்ற இலங்கை இளைஞனுக்குத் தொற்று

சிங்கப்பூரில் சிறையிலிருந்த இலங்கையைச் சேர்ந்த 21 வயது இளைஞர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளார்.

சமூக நுழைவு அனுமதி அட்டையை வைத்திருந்த அவர், இம்மாதம் 6ஆம் திகதியிலிருந்து சாங்கி சிறையில் இருக்கின்றார் எனத் தெரிவிக்கப்பட்டது.

கிருமி பரவல் தொடர்பான எல்லைக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதற்கு முன்னர், அவர் சிங்கப்பூருக்கு வந்திருந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

6ஆம் திகதி சிறையில் அடைக்கப்பட்ட அவர் மற்ற கைதிகளிடமிருந்து 14 நாள்களுக்குத் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார்.

அவருடன் ஒரே நாளில் அனுமதிக்கப்பட்ட மற்ற கைதிகளுக்கு கிருமித் தொற்று இல்லையெனக் கண்டுபிடிக்கப்பட்டது.

தொற்று ஏற்பட்டுள்ள போதும் நோய்க்கான அறிகுறிகள் தென்படாத இந்த இளைஞன், சிறைச்சாலைக்கு வெளியில் உள்ள தனிமைப்படுத்தும் வசதியில் தற்போது தங்க வைக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன் சிறைச்சாலையில் நோய்வாய்ப்பட்ட நால்வருடன் இவருக்கு தொடர்பு இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சண்முகலிங்கம் காசி




# உ ஆம் அலையால் அதிர்கிறது பீஜிங்!

## மீன் மீது விழுந்தது பழி!

சீனாவின் வுஹானில் தோற்றம்பெற்றதாகக் கருதப்படுகின்ற கொரோனா வைரஸ்சீனாவில் இரண்டாவது அலையாக அதன் தலைநகர் பீஜிங்கில் பரவ ஆரம்பித்திருக்கிறது. இதன் காரணமாகப் பீஜிங்கிலுள்ள உணவுச் சந்தைகள் மூடப்பட்டுள்ளன. காரணம் அந்த உணவுச் சந்தைகளில் தான் கொரோனாவின் 2ஆம் அலையின் ஆரம்பம் உணரப்பட்டிருக்கிறது.

பீஜிங்கிலுள்ள உணவுச் சந்தைகளிலுள்ள இறைச்சி மற்றும் கடல் உணவுகளுக்கான பிரிவுகளே கொரோனா வைரஸால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அங்கு இறைச்சி, மீன் என்பன வெட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் பலகைகளில் குறித்த வைரஸின் தடயம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்று ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்திருக்கிறது. இந்த வைரஸ் பரவலுக்கு அந்தப் பகுதியில் நிலவுகின்ற குறைந்த வெப்பநிலை, அதிக ஈரப்பதம் ஆகியன காரணிகளாக இருக்கலாம் என்று சீனச் சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அங்குள் மிகப் பெரிய ஜின்ஃபாடி உணவு மையத்துடன் பல உணவுச் சந்தைகள் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஓர் உணவுச் சந்தை கிட்டத்தட்ட 160 கால்பந்து மைதானங்கள் அளவிலான வர்த்தக அரங்குகளைக் கொண்டதாகக் காணப்படுகிறது. இவ்வாறான பல உணவுச் சந்தைகள் கொரோனாவின் மீள் பரவல் காரணமாகப் பீஜிங்கில் மூடப்பட்டுள்ளன. இந்த நிலையில் 2ஆம் அலையாகப் பீஜிங்கில் பரவி வருகின்ற கொரோனா வைரஸ் அங்கு பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.



### சந்தையில் சால்மன் மீன்

சீனாவில் அதிகளவானோர் விரும்பிஉண்ணும் கடலுணவில் ஒன்று சால்மன் என்கிற மீன். இந்த மீன் வெட்டும் பலகையில் கொரோனா வைரஸ் தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக வெளியான அறிவித்தல்களால் அது குறித்த பேச்சுகள் அதிகரித்துள்ளன. சிலி, நோர்வே, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இருந்து சீனாவுக்கு அனுப்பப்பட்டுவருகின்ற இந்த மீனைச் சீனர்கள் ஒதுக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

இறைச்சி, மீன் வெட்டும் பலகைகளில் வைரஸ் தடயங்கள் காணப்பட்டதாகச் செய்திகள் வெளியாகிய உடனே, கொரோனா வைரஸ் தடயங்கள் எவ்வாறு அவற்றில் பரவின அல்லது இருந்தன என்று அறிவதற்கு முதலில் அவசர அவசரமாகச் சால்மன் மீன் மீது பலராலும் கொரோனா வைரஸ் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டுள்ளது. ஜின்பாடி சந்தையில், சால்மன் மீன்களை வெட்டும் பலகைகளில் கொரோனா வைரஸ் தொற்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்று வெளியான தகவல்களின் பிரதிபலனாக இது நடந்துள்ளது.

### மீன் வெட்டும் பலகைகளில் மட்டுமல்ல வைரஸ்

ஜின்பாடி உணவுச் சந்தையில் மீன், இறைச்சி வெட்டும் பலகைகளில் கொரோனா வைரஸ் தொற்று கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்துதான் பீஜிங் நகரில் பெருமளவில் கொரோனா பரவத் தொடங்கியது. இதனால் மூடப்பட்ட ஜின்பாடி சந்தையின் சுற்றுப்புறங்கள் அனைத்திலும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதுதவிர, பீஜிங்கில் அனைத்துச் சேவைகள், பணிகளும் முடக்கப்பட்டுக் கிட்டத்தட்ட போர்க் 

கால நிலையில் சீனத் தலைநகர் வைக்கப்பட்டுள்ளது. ஜின்பாடி சந்தையிலிருந்து எடுக்கப்பட்டுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 40 மாதிரிகளில் கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அவற்றில் சில, மீன், இறைச்சி வெட்டும் பலகைகள் அல்ல என்று தெரிவிக்கப்படுகிறது.

### சால்மன் என்றாலே பீதி

2ஆம் கட்டக் கொரோனாத் தொற்றின் மையமாக ஜின்பாடி சந்தை மாறியிருப்பதும், அங்கு சால்மன் மீன்களை வெட்டும் பலகைகளில் கொரோனா இருக்கின்றது என்று செய்தி பரவியிருப்பதும் சால்மன் மீன் என்றாலே அங்குள்ள மக்களைச் சற்றுத் தள்ளிநிற்க வைத்திருக்கிறது. இந்த நிலையில் அங்குள்ள நவீன சந்தைகள், உணவகங்கள், உணவு விடுதிகளில் இருந்து சால்மன் மீன்கள் அவசர அவசரமாக அகற்றப்பட்டிருக்கின்றன. இதனால் சால்மன் மீன்களை இறக்குமதி செய்வதும் நிறுத்தப்பட்டுள்ளது. இப்போது சால்மன் மீன் அங்கு பரபரப்பை மேலும் அதிகரித்து இருக்கிறது.



### மீனை இலக்கு வைப்பது சரியல்ல

ஜின்பாடி சந்தையில் மீன், இறைச்சி வெட்டும் பலகைகளில் கொரோனா வைரஸ் பரவல் கண்டு பிடிக்கப்பட்டபின்னர் கிட்டத்தட்ட 150 பேருக்கு அங்கு தொற்று ஏற்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் கொரோனா வைரசின் பிறப்பிடமாகக் கருதப்படுகிற வுஹான் சந்தையைப் போல இந்த ஜின்பாடி சந்தை வனவிலங்கு வர்த்தகத்தில் ஈடுபடுவது இல்லை. குறைவு என்பதும் கூர்ந்து கவனிக்கத் தக்கது.

இப்படியிருக்க குறித்த மீனை மாத்திரம் இலக்கு வைத்துப் பேசுவது சரியானதல்ல என்றும் வாதிக்கப்படுகிறது. நோய்க் கட்டுப்பாட்டுக்கான சீனத் தேசிய மையத்தின் அவசரகால பதிலளிப்புப் பிரிவுத் துணை இயக்குனர் ஸ்ரீ குவாகிங் இதுகுறித்துக் கூறுகையில், 'சால்மன் மீன், சந்தையை அடைவதற்கு முன்பாகக் கொரோனா வைரஸ் தொற்று அதில் இருந்ததற்கான எந்தத் தடயமும் கிடைக்கவில்லை. இதனால் வைரஸ், ஜின்பாடி சந்தையில்தான் இருந்திருக்க வேண்டும்' என்கிறார். இதைப் பலரும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

### மீன்களுக்குள் கொரோனா புக வாய்ப்பில்லை

ஸ்ரீ குவாகிங்கின் கூற்றுக்குப் பலம் சேர்க்கும் விதமாக மற்றொருவரும் கருத்து வெளியிட்டிருக்கிறார். சீனாவின் சிங்குவா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த செங் காங் என்பவர் இதுகுறித்துத் தெரிவிக்கையில், 'வைரஸ்கள் செல்களைப் பாதிப்பதற்கு 'ஹோஸ்ட்' செல் மேற்பரப்பில் உள்ள வைரஸ் ஏற்பி உதவுகிறது. குறிப்பிட்ட ஏற்பி இல்லாமல் அவை செல்களுக்குள் நுழைய முடியாது, அப்படிப்பட்ட ஏற்பிகள் பாலூட்டிகளில் மட்டுமே உள்ளன. மீன்களில் இல்லை' என்று வாதிடுகிறார். மீன்களை வெட்டுகின்ற தொழிலாளர்களால், மீன் வர்த்தகர்களால் அல்லது அவற்றின் பரிமாற்றப் பயணங்களின்போது மீன்களில் வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலம் என்று சீனத் தேசிய தலைமைத் தொற்றுநோயியல் நிபுணர் வு ஜுன்யும் தனது பக்க வாதத்தை முன்வைக்கிறார். நிலமை இப்படியிருக்க 2ஆம் கட்டக் கொரோனாவின் ஆரம்பம் இன்னும் தெளிவாகக் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதால் சீனாவுடன் மாத்திரமன்றி உலக நாடுகள் அனைத்துடனுமான உறவிலிருந்து விலகியிருப்பதே அனைவருக்கும் முன்னுள்ள தற்போதைய வழி.

பஞ்சாட்சரம் ஜோன் டிலக்ஷன்



இன்று ஜூன் 20 உலக அகதிகள் தினம். அதையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.

# அகதிகளாக வாழ்வது எம்மவர்களுமே!

ஆபிரிக்கா அகதிகள் தினமாகக் கொண்டாடப்பட்டு வந்த இன்றைய தினம், ஆபிரிக்க அகதிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை முன்வைத்த சிறப்புத் தீர்மானத்தின்படி உலக அகதிகள் தினமாக மாற்றத்துக்குள்ளாகியது. ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 20 ஆம் திகதி கடைப்பிடிக்கப்படுகின்றது. உலகில் பஞ்சம், பட்டினி, போர், இயற்கை அழிவுகள் போன்ற காரணங்களால் தமது நாட்டை விட்டு வெளியேறுபவர்கள் அகதிகள் என்று அழைக்கப்படுகின்றனர். எங்கு போவதென்று தெரியாமல் பிறந்த மண்ணை விட்டுப் பிற நாடுகளுக்கு இடம்பெயர்ந்து பல துன்பங்களை அனுபவித்து வாழ்ந்து வரும் அகதிகள் பற்றிய விழிப்புர்வை உலக மக்களிடம் கொண்டு செல்வதே இந்தத் தினத்தின் நோக்கமாகும்.

தான் பிறந்த, தாய் நாட்டை விட்டுப் பிற நாடுகளுக்குச் சென்று தஞ்சம் புகுந்தவர்கள் அகதிகளாகவே பார்க்கப்படுகின்றனர்.

> எமது நாட்டிலும் இந்த நிலைமை காணப்பட்டது. விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெற்ற போர் காரணமாக இலங்கைத் தமிழர்கள் சொந்த நாட்டிலேயே அகதி வாழ்க்கை வாழ்ந்தனர்.



### போர் மற்றும் பாதுகாப்பின்மை அதிக அகதிகளை உருவாக்குகின்றன

போர்ச் சூழல் மற்றும் பாதுகாப்பின்மை காரணமாகத் தினமும் சராசரியாக 28ஆயிரத்து 300 பேர் தமது நாட்டைவிட்டு வெளியேறிய வண்ணம் உள்ளனர்.

ஐ.நா. அகதிகள் ஆணையகம் வெளியிட்டுள்ள தகவலின் அடிப்படையில் உலகளவில் 7 கோடி பேர் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் 18 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அகதிகளாக வாழ்ந்து வருபவர்கள் உண்மையிலேயே பரிதாபத்துக்குரியவர்கள். நிர்க்கதியற்ற நிலையில், பிறந்த மண்ணையும், தங்களின் உறவுகளையும் விட்டு வெளியேறிப் பிற நாட்டில் தஞ்சமடைய வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள். இவ்வாறு வேறொரு நாட்டுக்குத் தஞ்சமடைபவர்களுக்கு அந்த நாட்டில் உரிமை, சுதந்திரம் பூரணமாகக் கிடைக்கின்றனவா என்பது கேள்விக்குறியே. அகதிகளாய் பிற நாட்டுக்கு வந்து சேருகின்றவர்களை ஏற்றுக்கொண்டு அவர்களுக்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் ஐ.நா அமைப்பு செய்து கொடுப்பதோடு, அவர்களுக்கு உதவியையும், பாதுகாப்பையும் வழங்குகின்றது.

### அகதிகளைத் திருப்பி அனுப்ப முடியாது

ஒரு நாட்டைவிட்டு வெளியேறி இன்னொரு நாட்டுக்குத் தஞ்சம் புகுந்தவர்களை வற்புறுத்தித் திருப்பி அனுப்பக்கூடாது. முக்கியமாக அங்கு அவர்கள் அபாயகரமான சூழலை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்று தெரிந்திருந்தும் அவர்களைத் திருப்பி அனுப்புவது தவறான விடயமாகும்.

ஒவ்வொரு நாட்டு அரசுக்கும், அந்த நாட்டில் வாழ்கின்ற மக்களுக் கும் மனிதாபிமான பண்பு என்பது மிக முக்கியமாகக் காணப்பட வேண்டும். உதாரணமாகக் கைக்குழந்தையோடும், ஏனைய பிள்ளைகளோடும் தஞ்சமடைய வருகின்ற ஒரு பெண்ணை ஏற்றுக் கொண்டு மனிதாபிமான அடிப்படையில் உதவுவதற்கு முன்வர வேண்டும்.

சட்டபூர்வமாகக் குடியேறி இருக்கும் பிற நாட்டு மக்களைச் சமமாகவும், எந்தவிதமான பாரபட்சமின்றியும், நடத்த வேண்டும். அகதிகள் என்ற காரணத்தால் அவர்களை விலக்கி வைப்பது மிகவும் தவறான விடயமாகும். அது மட்டுமில்லாது அவர்களுக்குத் தேவையான உரிமைகளையும், சுதந்திரங்களையும் பெற்றுக் கொடுப்பது அந்த நாட்டினுடைய பொறுப்பாகும்.



### அகதிகளுக்குரிய கடமை

அகதிகளாய் பிற நாட்டில் தஞ் சம் புகுந்தவர்களுக்குஇருக்கின்றமிகமுக்கியகடமைஎன்னவென்றால், தான் அகதியாய்த் தஞ்சம் புகுந்த நாட்டினுடைய சட்டதிட்டங்களை மதித்துச் செயற்படுவதாகும். வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தவர்களை மட்டும் அகதிகள் என்று கூறமுடியாது. தனது சொந்த, தாய் நாட்டிலேயே அகதிகளாக வாழ்கின்ற சூழ்நிலையும் ஏற்படும். இயற்கை இடர் காரணமாகவும், உள்நாட்டுப் போர் காரணமாகவும் தனது சொந்த நாட்டிலேயே அகதிகளாகப் பலர் வாழ்கின்றனர். எமது நாட்டிலும் இந்த நிலைமை காணப்பட்டது. விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெற்ற போர் காரணமாக இலங்கைத் தமிழர்கள் சொந்த நாட்டிலேயே அகதி வாழ்க்கை வாழ்ந்தனர். அது மட்டுமில்லாது தாய் நாட்டை விட்டு வெளியேறிப் பிற நாடுகளுக்குச் செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

### அகதிகளுக்கு உதவ வேண்டும்

அகதிகளாக இடம்பெயர்ந்து வாழ்கின்ற உறவுகளை அரவணைப்பது அவசியமாகும். உதாரணமாகச் சுனாமி ஏற்படும் போது கரையோரப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்து வாழ்கின்ற சூழ்நிலை ஏற்படலாம். இந்தநிலைமையில் அகதிகளாய் இடம்பெயர்ந்து வருபவர்களுக்கு எம்மாலான அனைத்து உதவிகளையும் செய்து கொடுக்கின்ற மனிதாபிமான பண்பு எம்மிடத்தில் காணப்படவேண்டும்.



அகதிகளாய் புலம்பெயர்ந்து வருகின்றவர்களை வரவேற்பது மிகவும் முக்கியம். ஐ.நா. அகதிகள் ஆணையகம் இந்த மகத்தான பணியைச் செய்து வருவது பாராட்டத்தக்கதாகும். இதுதவிர சர்வதேச புலம்பெயர்வு நிறுவனம், செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவை இந்த ஆணையகத்துடன் இணைந்தும், தனியாகவும் அகதிகள் நலனுக்காகச் செயற்பட்டு வருகின்றது. 35 லட்சம் அகதிகளுக்குத் துருக்கி நாடு அடைக்கலம் கொடுத்துள்ளது. அகதிகளுக்கு அடைக்கலம் கொடுக்கும் நாடுகளின் பட்டியலில் துருக்கியே முதலிடத்தில் உள்ளது. அகதிகளாய் அடைக்கலமடைய வருகின்றவர்களுக்கு வேண்டிய மருத்துவ வசதி, சுகாதாரம், கல்வி, தொழில் வாய்ப்பு உட்கட்டமைப்பு போன்ற அனைத்துவிதமான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இவ்வாறு ஏற்படுத்திக் கொடுப்பதோடு மட்டுமில்லாமல் அவர்களுக்கான உரிமை, சுதந்திரம் ஆகியவற்றையும் கொடுத்து எந்தவிதமான பாரபட்சமும் இன்றி மனிதநேயத்துடன் அவர்களை ஏற்றுக்கொள்வது மிக மிக அவசியமாகும்.

(கட்டுரையாளர்
கிழக்குப் பல்கலைக்கழக
சமூகவியல் துறை மாணவர்)



# மணற்காட்டுப் பகுதியில் மீண்டும் மணற்கொள்ளைக்கு அத்திவாரம்

## மீண்டும் கடந்த காலக் கொள்ளையர்களே கைவரிசை என ஐங்கரநேசன் எச்சரிக்கை

**மணற்காட்டில் மீண்டும் பாரிய மணற்கொள்ளைக்கு அத்திவாரம் இடப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் மணல் அகழ்வை மணற்கொள்ளையாக மாற்றி, ஏகபோக உரிமை கொண்டாடி ருசி கண்ட அரசியற் புள்ளிகளே புதிய ஆட்சியில் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக மீண்டும் கைவரிசையைக்காட்ட ஆரம்பித்துள்ளனர்.**

மணல் விநியோகம் மீண்டும் அரசியல்வாதிகளினதோ, அரசியல் பின்புலம் கொண்டவர்களின் கைகளுக்கோ போவது உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். தவறின் மணல் அகழ்வு பாரிய மணற்கொள்ளையாக விஸ்வரூபம் பெற்று யாழ் குடாநாடு மிகமோசமான சூழற்சீர்குலைவுகளைச் சந்திக்க நேரிடும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் வடக்கின் முன்னாள் விவசாய அமைச்சரும் நாடாளுமன்றத் தேர்தலில் சுயேச்சையாக மாம்பழம் சின்னத்தில் போட்டியிடுகின்றவருமாகிய பொ.ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

மணற்காட்டு மணல் விநியோக முறையில் அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் தொடர்பாக அப்பகுதி மக்கள் தமது எதிர்ப்புகளை வெளியிட்டு வருகின்றனர். இதையொட்டி பொ.ஐங்கரநேசன் வெளியிட்டிருக்கும் ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் –

மணல் அகழ்விற்கான அனுமதியை மத்திய அரசாங்கமே வழங்குகிறது. எனினும், ஏற்கனவே மணற்கொள்ளையினால் ஏற்பட்டிருந்த சூழற்பாதிப்புகளைக் கருத்திற் கொண்டும் நியாயமான விலையில் மக்களுக்கு மணல் கிடைக்கும் பொருட்டும் வடக்கு மாகாண சபையில் அமைச்சராக நான் பதவியேற்றதும் சில ஒழுங்குபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. வடமராட்சி கிழக்கின் மணல் அகழ்வு மற்றும் மணல் விநியோகம் தொடர்பான ஒழுங்குபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. அரசாங்க அதிபர், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர், அப்பிரதேச மக்கள் ஆகிய முத்தரப்பினருடனான பலசுற்றுப் பேச்சின் பின்னர் மணல் அகழ்வு அப்பிரதேச கிராமமட்டப் பொது அமைப்புகளிடமும், மணல் விநியோகம் யாழ் – மாவட்ட பாரவூர்திகள் கூட்டுறவுச் சங்கத்திடமும் ஒப்படைக்கப்பட்டிருந்தது. விடுதலைப்புலிகளின் காலப்பகுதியில் மணல் வியாபாரத்தின் வருவாயில் பெரும்பகுதி அப்பிரதேசத்தின் அபிவிருத்திக்கே பயன்படுத்தப்பட்டது. அதேபோன்றே, கிராமமட்ட அமைப்புகள் பெற்ற வருவாயின் கணிசமான பகுதி பிரதேச செயலரின் நெறிப்படுத்துகையில் அப்பிரதேசத்தின், அபிவிருத்திக்குப் பயன்படுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், புதிய ஆட்சியில் வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறியுள்ளது.

மணற்காட்டு கிராம அபிவிருத்திச்சங்கத்திடம் இருந்து மணலைப் பெற்று நேரடியாக விநியோகித்து வந்த யாழ் – மாவட்ட பாரவூர்திகள் கூட்டுறவுச் சங்கத்தினர் புறந்தள்ளப்பட்டு இடையே அரசியல் பின்புலத்துடன் கூடிய இடைத்தரகுப் பாரவூர்திப் போக்குவரத்துப் புகுந்து கொண்டுள்ளது. இவர்களிடமிருந்தே யாழ் – மாவட்ட பாரவூர்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் மணலைப் பெற்று விநியோகிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். மேலும், அனுமதிக்கப்பட்ட அளவை விடவும் பாரிய அளவில் மணல் அகழ்வு இடம்பெற்றிருப்பதும் தெரியவந்துள்ளது. கடந்த காலத்தில் மணற்கொள்ளை தொடர்பான புள்ளிவிவரங்களை வெளியே பகிர்ந்து கொண்டமைக்காக குடத்தனையைச் சேர்ந்த தேவராசா கேதீஸ்வரன் என்ற சூழற்பற்றாளர் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். இது ஏற்படுத்திய அச்சம் காரணமாக இப்போதும் இடைத்தரகர்களாகப் புகுந்து கொண்டுள்ளவர்களின் பின்னணி குறித்து வெளிப்படையாகக் கருத்துத் தெரிவிக்க அப்பகுதிமக்கள் அஞ்சும் சூழ்நிலையே நிலவுகிறது.

மணல் அகழ்வு, மணல் விநியோகம் அரசியல்வாதிகளின் கைகளுக்குப் போய்ச்சேர்வது தொடர்பாகத் தமது எதிர்ப்பை வெளிக்காட்டும் மக்களுக்குத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் எப்போதும் பக்கபலமாக நிற்கும். இவர்களின் போராட்டத்திற்குத் துணை நிற்கும் தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகள் எதுவாயினும் அவர்களுடன் சேர்ந்து போராடவும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தயாராகவுள்ளது. – என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சர்வதேச யோகா தினம் நாளை அனுஷ்டிப்பு

**(ந.லோகதயாளன்)**

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் சர்வதேச யோகா தினம் நாளை தினம் அமைச்சின் அலுவலக வளாகத்தில் உள்ள ஸ்தான பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த யோகா பயிற்சி 50 பேருடன் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெறும் அதேநேரம் பாடசாலை மாணவர்கள் மட்டத்தில் யோகாவை முன்னிட்டு மேற்கொண்ட கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகளில்வெற்றியீட்டிய மாணவர்களிற்கான சான்றிதழை யாழில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தின் தூதுவர் பாலச்சந்திரன் நிகழ்வில் கலந்து கொண்டு வழங்கவுள்ளார். பரிசில்களுக்கு வெற்றியீட்டிய 20 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

நாளை காலை 8 மணி முதல் 8.30 மணி வரை இந்நிகழ்வு இடம்பெறும்.

இந்த நிகழ்வுகளிற்கான அனுசரணையை இந்தியத் துணைத் தூதரகம் வழங்கியுள்ளது.



# நயினை அம்மனின் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜுன் 21

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினை நாகபூசணி அம்மன் ஆலய உயர் திருவிழா கொடியேற்றத்துடன் இன்று ஆரம்பமானது.


15 நாள்கள் தொடர்ந்து நடைபெறும் மகோற்சவம் தெப்பத்திருவிழாவுடன் நிறைவுறும்.

ஆண்டுதோறும் பல லட்சம் அடியார்கள் இலங்கையின் பலபகுதிகளில் இருந்துவ்மட்டுமில்லாமல் வெளிநாடுகளில் இருந்தும் வருகை தருவார்கள். எனினும் இம்முறை கொவிட் –19 நோய்க் கட்டுப்பாடுகளை அடுத்து நயினாதீவு மக்களில் 100 பேர் மட்டுமே ஆலயத்துக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய கொடியேற்றத்தில் ஆலயச் சிவச்சாரியர்கள், நிர்வாகத்தினர் உள்ளிட்டோர் மட்டுமே ஆலயத்துக்குள் அனுமதிக்கப்பட்டனர்.











இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.06.2020 இல் வெளியிடப்பெற்றது.